# கரூர் மருத்துவமனையில் முதல்வர் கண்ணீர் அஞ்சலி - ஆறுதல்!











முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.9.2025) நள்ளிரவில் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நேரில் சென்று, கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் உடல்களுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

# மின்னல் வேகத்தில் செயல்பட்ட முதல்வர்!

**சென்னை, செப்.29-**

**கரூரில் பிரச்சார கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி பலியானவர்கள் குடும்பத்துக்கு ஆறுதல் கூற, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நள்ளிர வில் கரூர் விரைந்து பலியான வர்களுக்கு அஞ்சலி /செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.**

**முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!**

கரூர் மாவட்டத்தில் த. வெ.க. தலைவர் நடிகர் விஜயின் பிரசாரக் கூட்டத்தில் ஏற் பட்ட நெரிசலில் சிக்கி பலர் உயிரிழந்தனர். பலர் ஆஸ்பத் திரியில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

இதனை அறிந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மிகுந்த துயரம் அடைந்தார். இருப்பினும் அவர் மின்னல் வேகத்தில் நடவடிக்கை களை எடுக்க தொடங்கி னார். தானே அனைவரையும் செல்போன் மூலம் தொடர்பு கொண்டு உத்தரவுகளை பிறப்பித்தப்படி இருந்தார்.

முதலில் அவர் செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ.வை தொடர்பு கொண்டு ஆஸ்பத் திரிக்கு செல்லுமாறு உத்தர விட்டார். பின்னர் அமைச்சர்கள் மா.சுப்பிர மணியன், அன்பில் மகேஸ் பொய்யா மொழி ஆகியோரை செல்போனில் அழைத்து விரைவில் அங்கு செல்லுங்கள் என்றார். தொடர்ந்து கூடுதல் டி.ஜி.பி. டேவிட்சன் தேவாசிர் வாதத்தை தொடர்பு கொண்டு சம்பவ நிலவரங்களை கேட்டறிந்து, உடனே அவரையும் கரூர் செல்லுமாறு உத்தரவிட்டார்.

**சிகிச்சை அளிக்க உத்தரவு!**

பின்னர் முதலமைச்சர் மு.க.ஸ்டா லின், சுகாதாரத் துறைதுறைச் செய லாளர் செந்தில்குமாரை தொடர்பு கொண்டு ஆஸ்பத்திரியில் உயர்தர சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும் அதற்கான ஏற்பாடுகள் அனைத்தை யும் செய்ய வேண்டும் என்றார்.

கரூர் மாவட்ட கலெக்டர் தங்க வேலுவை தொடர்பு கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீட்புப் பணிகளை துரிதப்படுத்த வேண்டும் என்றும், ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கும் பணிகளை முன்னின்று கவனிக்க வேண்டும் என்றும், அனைவரும் தரமான சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும் உத்தர விட்டார்.

அதேபோல திண்டுக்கல், திருச்சி, நாமக்கல் ஆகிய 3 மாவட்ட கலெக்டர் களையும் தொடர்பு கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைவரும் உடன டியாக கரூருக்கு செல்ல வேண்டும் என்றும், அங்கு தேவையான வசதிகளை ஏற்ப டுத்தி தர வேண்டும் என்றார்.

**கூடுதல் டாக்டர்கள்!**

பின்னர் மருத்துவ கல்லூரி இயக்குனரை தொடர்பு கொண்ட முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், கரூரை சுற்றியுள்ள மாவட்டங்களில் உள்ள டாக்டர்கள், நர்சுகள் மற்றும் மருத்துவ பணி யாளர்களை உடனடி யாககரூருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

இவை எல்லாவற்றையும் முதல் அமைச்சர் சில நிமிடங்களில் செய்து முடித்தார். தொடர்ந்து நேற்று நள்ளிரவை தாண்டியும் கரூர் நிலவ ரத்தை கண்காணித்து கொண்டும், உத்தரவுகளை பிறப்பித்தப்படியும் இருந்தார்.